தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 19, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 ஏப்ரல் 1, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்.”

செய்வதற்குக் கடுமையான செயல்களையும் செய்யும் முறை அறிந்து, திறம்படச் செய்து முடிக்கிற திறமை உள்ளவரே பெருமையுடையவராவார்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

துணை மின் நிலையம்

***20757—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34–வது வட்டம், செம்பியம் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெரம்பூர் தொகுதி, செம்பியம் பகுதி, 34-வது வட்டத்தில் பெருகிவரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டு, காந்தி நகரில் உள்ள செம்பியம் 110/33/11 கி.வோ. துணை மின் நிலைய வளாகத்தில் 33/11 கி.வோ. உள்ளடக்கிய indoor *துணை மின் நிலையம் 2x8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியுடன் அமைப்பதற்கு ரூ.8 கோடி மதிப்பில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நீண்ட நாட்களாக, சொல்லப்போனால், பல வருடங்களாக அந்தப் பகுதியிலே இருக்கிற மின் தடைகள் காரணமாக தரமான மின்சாரம் கிடைக்காத நிலை இருந்தது. மிக அடர்த்தியாக, ஏழை மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் மின் மாற்றிகளையும் அதிகப்படுத்த வேண்டும்; துணை மின் நிலையங்களையும் அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைத்து வந்தேன்; இப்போது 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றி அலகுகள் அங்கே உருவாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காந்தி நகர், கொடுங்கையூர், மாதவரம், கவியரசு கண்ணதாசன் நகர் போன்ற பகுதிகளில் இப்போது மிகக் கடுமையாக மின் அழுத்தக் குறைபாடுகள் உள்ளன. அங்கே தொழிற்பேட்டைகள் இருக்கின்றன; தொழிற்சாலைகள் இருக்கின்றன; குழந்தைகள் படிக்க முடியாத பிரச்சினை இருக்கிறது. அங்கு மிக அடர்த்தியாக இருக்கின்ற வீடுகளிலே ஜன்னல் வசதிகூட இல்லாமல் 300 சதுரடி, 200 சதுரடியிலே வீடுகள் என்று இருக்கின்ற நிலைமையிலே-மின்சாரம் கிடைக்கின்றபோது, தடை இல்லாமல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருக்கின்றது. ஆகவே, எவ்வளவு விரைவில் இந்தப் பணி முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, செம்பியம் பகுதி 34–வது வட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு தற்போது செம்பியத்திலுள்ள 110/33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்தும், இந்தியா பிஸ்டன்ஸ் 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்தும் மற்றும் கொடுங்கையூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்தும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பெருகிவரும் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத்துணை மின் நிலையங்களில், குறிப்பாக செம்பியம் துணை மின் நிலையத்தில் மின் பளு மிகவும் அதிகரித்துவிட்ட நிலையிலே, இப்படிப்பட்ட சிறு, சிறு தடங்கல்கள் ஓரளவு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியில் கூடுதல் மின் திறனை உருவாக்குவதற்காக, மின்சாரம் வழங்கப்படுகிற நேரங்களில், தடை இல்லாமல் அப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கேற்ப, இத்துணை மின் நிலையங்களில், முறையே 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின்மாற்றிகளும் மற்றும் மற்றொரு 16 எம்.வி.ஏ திறன்கொண்ட 2 மின்மாற்றிகளும் அந்த 110/33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் இயங்கி வருகின்றன. இதனுடைய மொத்தத் திறன் 32 எம்.வி.ஏ ஆகும்.. ஆனால், இப்போது இருக்கின்ற மின்பளு 32.4 எம்.வி.ஏ. என்ற அளவிற்கு அதிகரித்திருக்கின்றது. ஆகவேதான், கூடுதல் மின் பளு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு, அந்தப் பகுதியிலே இப்பொழுது புதியதாக 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு Power Transformer–ருடன் புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு 8 கோடி ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது.

மற்ற இரண்டு துணை மின் நிலையங்களிலும் போதுமான அளவிற்கு மின் திறன் இருக்கிறது. ஏனென்று சொன்னால், 24 எம்.வி.ஏ. திறன் கொண்ட இந்தியா பிஸ்டன்ஸ் பகுதி துணை மின் நிலையத்திற்கு 21.56 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் பளுதான்

இருக்கிறது. அதேபோல, கொடுங்கையூரிலே 24 எம்.வி.ஏ. மின் திறன் கொண்ட மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. அதில் 22 எம்.வி.ஏ. திறன் அளவிற்குத்தான் மின் பளு இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு துணை மின் நிலையங்களைப் பற்றி பிரச்சினை இல்லை. 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தினை மட்டும் தரம் உயர்த்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு வேண்டிய இடமும் கண்டறியப்பட்டுள்ளது. அதே பகுதியில், அதே துணை மின் நிலையத்தைத் (indoor) தரம் உயர்ததுவதற்கு 15 சென்ட் இடமே போதுமானது.

முற்பகல் 10—05

ஆகவே, கூடுதல் செலவானாலும் பரவாயில்லை என்று indoor துணை மின் நிலையமாக இதை உருவாக்குவதற்கு முடிவு செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டுவிட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யும் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தப் பணிகள் அத்தனையும் முடிக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அந்தப் பணிகள் முடிக்கப்பட வேண்டுமென்று கால நிர்ணயம் செய்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாண்டு இறுதிக்குள் இந்தத் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கும், இந்த ஆண்டு டிசம்பர் முடிவுக்குள் பணிகள் முடிவடையும் என்ற அறிவிப்பிற்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

2013 ஏப்ரல் 1]

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டப் பேரவை தொகுதிக்குட்பட்ட கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ளடங்கிய அனக்குடி, மானம்பாடி, புத்தூர், மகாராஜபுரம், சேங்கனூர் ஆகிய ஊராட்சிகளில் 60–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் இருக்கின்றன. திருப்பனந்தாள், கும்பகோணம் ஆகிய பகுதிகளிலிருந்துதான் மின்சாரம் வழங்கப்பட்டு மின் விநியோகம் நடைபெறுகிறது. எனவே, பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைப் பாதுகாக்க புத்தூரில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பளுவை ஆய்வு செய்து, அத்தனை பகுதிகளுக்கும் புதிய துணை மின் நிலையங்களைத் தேவைக்கேற்ப அமைக்கவேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளிலும் உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின் நிச்சயமாக அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

107—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

***7099—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—